## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 14 - பட்டி மேய்ந்து
## (விருந்தாவனத்தே பரமனைக் கண்டமை கூறுதல்)

637 * பட்டி மேய்ந்தோர் காரேறு * பலதேவற்கு ஓர் கீழ்க் கன்றாய் *
இட்டீறிட்டு விளையாடி * இங்கே போதக் கண்டீரே? **
இட்டமான பசுக்களை * இனிது மறித்து நீரூட்டி *
விட்டுக் கொண்டு விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 1

638 அனுங்க என்னைப் பிரிவு செய்து * ஆயர்பாடி கவர்ந்துண்ணும் *
குனுங்கு நாறிக் குட்டேற்றைக் * கோவர்த்தனனைக் கண்டீரே? **
கணங்களோடு மின்மேகம் * கலந்தாற் போல வனமாலை *
மினுங்க நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 2

639 மாலாய்ப் பிறந்த நம்பியை * மாலே செய்யும் மணாளனை *
ஏலாப் பொய்கள் உரைப்பானை * இங்கே போதக் கண்டீரே? **
மேலால் பரந்த வெயில் காப்பான் * வினதை சிறுவன் சிறகென்னும் *
மேலாப்பின் கீழ் வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 3

640 கார்த்தண் கமலக்கண் என்னும் * நெடுங்கயிறு படுத்தி[1] * என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் * ஈசன் தன்னைக் கண்டீரே? **
போர்த்த முத்தின்குப்பாயப் * புகர்மால் யானைக் கன்றே போல் *
வேர்த்து நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 4

641 * மாதவன் என் மணியினை * வலையில் பிழைத்த பன்றி போல் *
ஏதும் ஒன்றும் கொளத்தாரா * ஈசன் தன்னைக் கண்டீரே? **
பீதக ஆடை உடை தாழப் * பெருங்கார் மேகக் கன்றே போல் *
வீதியார வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 5

642 தருமம் அறியாக் குறும்பனைத் * தன் கைச் சார்ங்கம் அதுவே போல் *
புருவ வட்டம் அழகிய * பொருத்தமிலியைக் கண்டீரே? **
உருவு கரிதாய் முகம் செய்தாய் * உதயப் பருப்பதத்தின் மேல் *
விரியும் கதிரே போல்வானை * விருந்தாவனத்தே கண்டோமே 6

643 பொருத்தம் உடைய நம்பியைப் * புறம்போல் உள்ளும் கரியானை *
கருத்தைப் பிழைத்து நின்ற * அக்கருமா முகிலைக் கண்டீரே? **
அருத்தித்தாரா கணங்களால் * ஆரப் பெருகு[2] வானம் போல் *
விருத்தம் பெரிதாய் வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 7

---
[1] படுத்து
[2] பருகு

644 வெளிய சங்கொன்றுடையானைப் * பீதக ஆடை உடையானை *
அளிநன்குடைய திருமாலை * ஆழியானைக் கண்டீரே? **
களிவண்டு எங்கும் கலந்தாற் போல் * கமழ்பூங் குழல்கள் தடந்தோள் மேல் *
மிளிர நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 8

645 * நாட்டைப் படை என்று அயன் முதலாத்[3] தந்த * நளிர் மாமலர் உந்தி *
வீட்டைப் பண்ணி விளையாடும் * விமலன் தன்னைக் கண்டீரே? **
காட்டை நாடித் தேனுகனும் * களிறும் புள்ளும் உடன் மடிய *
வேட்டையாடி வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 9

646 * பருந்தாட் களிற்றுக்கு அருள் செய்த * பரமன் தன்னை * பாரின் மேல்
விருந்தாவனத்தே கண்டமை * விட்டுசித்தன் கோதை சொல் **
மருந்தாம் என்று தம் மனத்தே * வைத்துக் கொண்டு வாழ்வார்கள் *
பெருந்தாள் உடைய பிரான் அடிக் கீழ்ப் * பிரியாதென்றும் இருப்பாரே 10

**அடிவரவு:** பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம்
வெளிய நாட்டை பருந்தாள் இருள்

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

[3] தன்னைத்